ஸ்ரீ:

# கானவித்யா ப்ரகாசினி

இனிய தமிழ் மாதப் பத்திரிகை

தெள்ளூற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக்கண்டார் — பாரதி.

மலர் 1. } மே–1932. { இதழ் 8.

## சந்திரன்.

மீனினமோடிப் பாக்குதம்மா—ஊடே
வெள்ளி ஓடமொன்று சொல்லுதம்மா
வானும் கடலாக மாறுதம்மா—இந்த
மாட்சியிலுள்ளம் முழுகுதம்மா. 1

முல்லைமலர்ப் பந்தலிட்டனரோ—தேவர்
முத்துவிதானம் அமைத்தனரோ
வெல்லுமதியின் திருமணமோ—அவன்
விண்ணில் விழாவரும் வேளையிதோ. 2

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா—அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா
இம்பருலகின் இயல்பிதம்மா—மதிக்
கின்னுரினி யாருமுண்டோ அம்மா. 3

மாற்றம் உலகின் இயற்கையென—இங்கு
மாந்தரும் கண்டு தெளிந்திடவோ
போற்றுமிறைவனிம் மாமதியம்—விண்ணில்
பூத்து நிலவ விதித்தானே. 4

அம்புலிக்கூட்டில் முயல்வருமோ—ஈதோர்
அண்டப்புளுகோ அறியேனம்மா
பம்பியெழுமலை அங்குளதும்—மேலைப்
பண்டிதர்கண்ட கனவேயம்மா. 5

கூனக்கிழவி நிலவினிலே—ராட்டில்
கொட்டை நூற்கும் பணி செய்வதையிம்
மாநிலம்கண்டு மகிழ்ந்திடவே—காந்தி
மாமதி யோங்கி வளருதம்மா. 6

சின்னஞ்சிறுவில்லாய்க் காணுதம்மா—பின்னர்
செம்பொற்குடம்போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம்! பாராயம்மா—ஈதோர்
இந்திரஜாலமோ கூறுயம்மா. 7

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா—உடல்
வட்டந்திருந்தி வருகுதம்மா
தளர்ந்து தளர்ந்து பின்போகுதம்மா—கண்ணில்
சற்றுந் தெரியாமலா குதம்மா. 8

பாலாழிமீது படர்ந்த வெண்ணெய்—ஒரு
பந்தாயுருண்டு திரண்டதுவோ
மேலாமுலகில் ஒளி செயவே—ஈசன்
விண்ணகமிட்ட விளக்கிதுவோ. 9

இரவைப் பகலாயியற்றுதம்மா—வெப்பம்
இல்லாதிளைப்பெலாம் ஓட்டுதம்மா
அரவம் விழுங்கினும் அஞ்சாதம்மா—எங்கள்
ஆண்டவன் சூடுமணியே யம்மா. 10

பொன்மரம்காய்த்த கனியிதுவோ—இந்தப்
பூமகள்சூடும் கழங்கிதுவோ
கண்மனமுங் களிகொள்ளக் கவினொளி
காட்டிவிளங்கும் மதியிதுவே. 11

கண்ணுதலுள்ளக் கருணையதோ—கொற்கைக்
காவலர்கண்ட புகழதுவோ
மண்ணகஞ் செய்திடு புண்ணியமோ—இன்று
வானகம்வந்து நிலவுதம்மா. 12

—தேசிகவிநாயகன்.

# மனிதனிற் கடவுள்

(சுத்தானந்த பாரதி.)

(முன் 268-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

எனதென தென்னல் இடராகும்; என்றும்,
அவனது வென்ன, அருள்,

என்பதையுணருகிறான், எண்ணங்களையும் சங்கற்பங்களையும் ஒடுக்குகிறான், ஆண்டவனுக்குத் தன்னைத் தருகிறான்,

பைப்பணமும் போன்ற பனிமவுதலுயிரை
மெய்க்கடவுள் மெய்த்தொண்டிற் பெய்.
சுடர்காற் கடல், புவிபுந் தோற்றிசமை யாளுங்
கடவுட்கீந் துன்னைக் களி;

என்ற நம்பிக்கையும் உறுதியும் எய்துகிறான்- "என் செயலால் யாவதொன்றுமில்லை, எல்லாம் உன் செயல்" என்று உருகுகிறான்! அந்தக் கரண சுத்தி யடைந்தால்தான் இந்நிலைவரும். சித்தம், மனம், அகந்தை இவற்றைப் புத்தியால் பகுத்தறிந்தடக்கி, சேட்டை யொடுங்கினால்தான் சித்தசித்தி யேற்படும் அந்த சுத்தமே கடவுள்நிலை. அதுவே மனிதனை பந்தத்தி னின்று சுதந்திரப்படுத்தும், கடவுளுடன் சமரஸப்படுத்தும் அப்போதே,

எல்லா வுலகிற் கிறைவனொருவன்
எல்லாவுடலும் இறைவ னாலயமே!

என்று தானும் அவனாகப் பிறவும் அவனாகக்காணும் உண்மைச்சமத்துவம், ஏற்படும்.

இவ்வுண்மை சமத்துவம் பத்திரிகை விதண்டவாதம், வசை புராணங்களால் வருமா? நாத்திகத்தால் எய்துமா? மனிதனுடைய அற்பப் புலனறிவிற்குப் புலப்படுமா?

எல்லா வுயிருள்ளும்
ஈசனையே கண்டுவப்போன்
நில்லா நெறி யொன்றுமில்.
"ஸத்தம் யோக வுச்சசே"
"பண்டிதா: ஸம தர்ஸன"

என்ற வுண்மைகளுக்கு அடிப்படை ஆண்டவனின் அருள் விழியன்றோ! அஃதின்றி, அவ்விழியை நாத்திகச் சூட்டுக்கோலாற் பொசுக்கிக்கொண்டு, "என் கண் பொட்டை! விண்ணும் மண்ணும் இருட்டே" என்ற முடிவிற் த வருதல் உதாரணங்களுக்கு எட்டாத மடமையேயாகும். கீதையில் கண்ணன் "ஏ! அருச்சுனா "ஊனக் கண்ணொன் உருக்காணாது! ஞானக்கண்ணை நல்குவேன் காணாய்" என்று கடவுள் விழியை யளித்தவனாலன்றோ விசயன் கடவுட்பேருருவைக் கண்ணானுட் காணமுடிந்தது! அக்கண்ணை எப்படிப் பெறுதல் முடியும்! தீவிரமான அறிவு, அன்பாலே தான் விக்ஞான கோசத்திற் பெற முடியும்! இதயநடுவே,

"மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி
மயானத்து வார்சடையான்—எண்ணினல்லான்
ஒப்புடையனல்லன், ஒருவனல்லன்
ஓரூர னல்லன், ஓர் உவமனில்லி,
அடியான், அந்நிறத்தன் அவ்வண்ணமுத்தன்
அவனருளே கண்ணாகக்காணினல்லால்,
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே!

ஆதலின் ஆழ்ந்த உறுதியும், அடைக்கலமும், உயர்ந்த அறிவும், கீழியல்புகளினின்று முற்றும் விடுதலையும், சித்த சுத்தியும் பெற்றால் தான் "அவனருட்கண்" உண்டாம். அதனால் அவனுடைய காட்சிகளையும், திருவிளையாடல்களையுங் காணலாம். அத்தெய்வம்,

பொல்லாரைப் பொறுத்தழித்துப் புதுமையாக்கும்
புண்ணியரைக் கண்ணெனவே போற்றியாளும்
எல்லையறும் படைப்பணிகள் இலகக்காட்டும்
எம்மதமுஞ் சம்மதமாயிருக்குந் தெய்வம்

நல்லபரி பூரணர்கள் நாடுந்தெய்வம்
நடுநின்ற நாயகமா யுலகையாளும்
எல்லாமுந் தானாகி எவர்க்குமொன்றாய்
எங்கேங்கும் நின்றுலவும் இதயத்தெய்வம்.

இத்தகைய தெய்வம் உள்ளது! உள்ளது! உள்ளது! கடவுள் உண்டு. ஆனால் அவனைக் காணக் கண்ணில்லை!

கண்ணா என் கண்ணெங்குங்
காணுமென் வானரசின்
மன்னா மணிவண்ணா
மாநிலத்தைக் கண்பாராய்!
உலகிற் பணிசெய்ய உண்மை தெளிய
நிலவுமிச் சென்ம நினை.

என்றவாறு உலகில் ஒருவினையை ஈந்து அவ்வினையைச் செய்யக் காலத்தையும் ஆயுளாகத்தந்து நம்மைக் கடவுள் அனுப்பினார் அவ்வினையைச் சரிவர முடிக்குமளவும் நாம் உலகில் தோன்றிக் கொண்டேயிருக்க வேண்டும். நமது ஜீவ நாடகத்தில் நம் நடிப்பு இருக்கும்வரையில் அடிக்கடித் தோன்றியும் மறைந்தும் நடிக்கிறோம். நம் நடிப்பு ஆனதும் நமது வேடத்தைக் கலைத்து முன்போலவே ஆகிறோம். நமது நிஜரூபத்திற்கும், வேடத்திற்கும் நடுவில் இருப்பது நமது நடிப்பே. அதுபோலவே நமக்குள் இருக்கும் கடவுளுக்கும் நமக்கும் நடுவிலிருப்பது பழுக்கத்துணை வினையே. அவ்வினை வேலியைத் தாண்டியே கடவுளையடையலாம். (Life is a mission, Life is real, Life is earnest) வாழ்வு ஒரு சிறந்த நோக்கத்தையுடையது, வாழ்வு உண்மை, வாழ்வு நிச்சயம் என்று பெரியோர் கூறுகின்றனர். ஒவ்வொரு மனிதனும் அருட்பணிக்காக வந்த உண்மையுரு, சத்யதூதன் என்பதே எனது எண்ணம் மனிதரின் தெய்வத்தின் சட்டை.

வினைசுற்றியதோர் வியனொளி உயிரே
வினைவிட்டகன்ற வியனொளி சிவமே!

“நீரிடை உப்பும், நிலத்திடை அப்பும், தாயிடைச்சூலும், தளிரிடைத்துவரும், தீயிடை வெம்மையுஞ் செறிந்தாங்குறலே” என்றார் வள்ளலாரும். அவ்வறிவிடை நிலவும் ஈசன் என்றுமுள்ளவன். நித்யானந்தன். அவனையே அறிஞர் “அரும்பொனே மணியே என் அன்பே!” என்று பாடினர். அவனை அறிதலே தன்னையறி

தல், அதுவே, அனைத்தினும் இன்பம். அவன் மயமாதலே இன்பமாகி ஈறறக்கலத்தல். அவனை அடைந்தவனே மனிதனில் உயர்ந்தவன் 'ப்ரஹ்மவிதாப்னோதிபரம்' என்று உபநிடதம் கூறுகிறது. அவன் தன்னொளினின்றே நமது ஆன்மாவை ஏற்றினான். ப்ரம்மம் என்று வேதாந்தமதம் கூறுவதும், எல்லாம் வல்ல இறைவன் என்று கிறிஸ்தவர் கூறுவதும், அஹுராவென்று பாரசீகர் கூறுவதும் அப்பொருளே. லவோத்ஸன் வகுத்த தவோதேகிங்கும், சேனைமலையினின்று ஏசுநாதர் பொழிந்த உபதேசமும், இயற்கையால் கற்பிக்கப்பட்டு முகம்மது நபி ஆர்த்த குரான்ஷெரீபும், அவஸ்த ஜெந்தாவும், உபநிடதங்களும் காண அலையும் பொருளும் அவனே அந்தப் பரஞ்சோதிப்பொருள். அத்யாத்மப் பரம்பொருளில் நமது தியானத்தை வைப்போமாக. அவன்நமக்கு விக்ஞானவொளிதருக" என்று வேதத்தின் கருவான காயத்ரி கூறுகிறது. இத்தகைய பரம்பொருளைக் கொண்ட நமது உயிர் எத்துணை மேன்மை பொருந்தியது. இதை அறிந்ததனாலன்றோ பூர்வ காலத்து இருடிகள், சிவோஹம், தத்வமஸி, ஓம்தத்ஸத் என்ற திருவாக்குகளை ஆர்த்தனர். நமது வேதாந்த மதத்தின் முடிபு உள் மனிதனைக் கடவுளுடன் சேர்க்கிறது.

இத்தகைய பேரொளியை நம்முட்கொண்டிருந்தும் அதை ஏன் நாம் அடையமுடியவில்லை. நமது வாழ்வின் நோக்கம் அவனைக் கலத்தலே. அவனுக்கும் நமக்கும் நடுவே எது உள்ளது? அதுவே கடவுள் நமக்கு ஈந்த வேலை. அவ்வேலையைச் செய்யாது, நாம் நமது இறைவனைப்பார்க்க முடியாது. அவனுடைய கோவிலில் நாம் தொண்டாக உள்ளோம். நமது தொண்டைச் சரிவர முடிக்கதுமே நாம் அவனிடம் சென்று இன்பங்கேட்க பாத்தியமுண்டு. அவனது தொண்டை நாம் அறிந்து ஆற்றாவிடின் அவனுடைய ஆளான தர்மத்தால் கண்டிக்கப்படுகிறோம். அவனிடம் குற்றவாளியைப் போலச் சென்று மறுபடியும் அவனால் வேலைக்கு அனுப்பப்படுகிறோம். தன்கோயிலான உலகின் காரியங்களே நமக்கு வினையாக வகுக்கப்பட்டுள்ளன. அதில் நமது அறத்தை நாமே செய்தே தீரவேண்டும். நமக்காக அதை ஒருவரும் செய்யமாட்டார்கள். நம்மைப் பிறப்பிற்கும் இறப்பிற்கும் அலைக்கும் சங்கிலி நம்மிடமேயுள்ளது. ஈசுவரார்ப்பணமாக வினையைச் செய்வதினால் தான் அதைப் போக்கலாம், அதுவே பற்றும் பாதை,

குர்வந் நேவேஹ கர்மாணி ஜிஜீவி ஷேச்சதம் ஸமா,
ஏவந்த்வயி நாந்யதே தோஸ்தி நகர்மலிப்யதே நரே.

'பேரியற் செயலொடு ஆறுண்டுவாழ் நார்க்கு இதனினும் பற்றற இன்வழியில்லை' என்று ஈஸாவாஸ்யோபநிடதம் கூறுகிறது. ஆதலின் நமது வாழ்வு நமது பணியைச் செய்யக் கொடுக்கப்பட்ட நேரமேயாகும். அப்பணியே நமது ஸ்வதர்மம். அதுவே ஸ்வகர்மம். அதுவே தன்னறம். முற்காலத்துப் பெரியோர் தமது பணியை அறிந்து அதையே யோகசித்தியால் ஆற்றினர். அதனாலே தாம் நம் நாடு இறைவனே உயிர்களாக விளங்கியது.

## வினை ஆற்றும் விதம்.

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்காதியன்ற தறம்.
தன்னறமுந் தற்புகழுந் தான்கருதா நற்பணியே
பன்னுமறை; செய்பணி.

வினை இருவகைப்படும். ஒன்று நமது தூல உடலைப்போற்றல். இரண்டாவது நமது ஆன்மாவைப் போற்றி ஈசனை எட்டல். ஊனைப்பற்றிய வினை உலகிற் பிறந்த பிராணிகளுக்கெல்லாம் பொதுவானது. ஊணும், உறக்கமும், ஊடலும், கூடலும், ஈனலும் பேணலும் விலங்கும் மனிதனும் ஆற்றும் பணிகளே. வயிற்றிற்காகப் பாடுபடுவதில் விலங்கும் மனிதனும் ஒன்றே ஆனால் விலங்கினும் மனிதன் எவ்வகையில் மேல் என்றால், மனிதன் அறிவு மிகுந்தவன். இரக்கமுள்ளவன். அன்புள்ளவன்.

மக்கட் குண்மா மனத்திரக்கமிலா
மக்களும் மாக்கள் மதி.

'மனித சமூகம் எனது சகோதரன். நான் அதில் ஒருவன் அதன் ஊழியத்திற்காகவே நான் பிறந்துளேன். மனித சமூகத்தின் நலமே எனது நலம், நான் தூய வாழ்க்கையுடன் வாழ்ந்தால் உலகில் ஒருவன் திருந்தினான் என்பதை எண்ணுவேன். நான் தீயவனானால் மனித குலத்திற்கே கெட்ட பெயர் வரும். நான் மட்டும் உண்ணவும் உடுக்கவும் பிறக்கவில்லை. மக்கட் குடும்பத்தைச் சேர்ந்த நான் அக்குடும்பத்திற்கு உழைக்கவே உண்கிறேன். அதற்கு உழைக்கவே பொருளீட்டுகிறேன். என் செய்கைகளில் தூய்மையாய் இருந்து, மனிதக் குடும்பத்தையும் சுத்தப்படுத்தல் எனது கடமை, ஆதலின் எல்லாரும் வாழும் பொருட்டு என் வாழ்வை

விசாலமாக்குதல் என் முதற்கடமை. எல்லாவுயிர்களும்இறைவனாலயமே என்றதை யறிந்து எவ்வுயிருக்கும் என்னுயிர்போல் அன்பு செலுத்துவது என் கடமை. உலகில் இருளிறும், வருமையிலும் வருந்தும் எனது ஏழைச் சகோதரருக்கு இரங்கி அவர்களுக்கு கல்வியுந் தொழிலுந்தருவது எனது கடமை. நான் எனக்காக வாழவில்லை. பிறர்க்காகவே வாழவே மனிதனாகப் பிறந்தேன்" நான் எனக்காக முத்திபெற யோகம்பயில வில்லை. மனிதஜாதிமுழுதும் முக்தியின்பம் பெறவே உலகில் அகண்ட சச்சிதானந்த வாழ்வு நிலவே யோகம் பெறுகிறது. என்று உணர்ந்து தன் வாழ்வைப் பூரணப்படுத்தலே சிறப்பு. மனிதன் சமூகவாழ்வு வாழவேபிறந்தவன்.

தமக்காக வாழுமாஞ் சாலம்: மனிதர்
பிறர்க்காக வாழ்வர் பேரிது.

விலங்குகளே தன்னயத்தோடு உண்டு, உறங்கிச் சிற்றின்பம் நுகருகின்றன, மனிதன் தானுந் துய்த்துத் தன்னலம் விடுத்துப் பிறர்க்குந் தொண்டு செய்யவே பிறந்துள்ளான். எல்லா உயிாகளின் பொறுப்பும் அறிவுள்ள மனிதன் கையில் கொடுக்கப்பட்டுள்ளது. எத்தனை செல்வரேனும் தமக்காக வாழ்பவர் மண்ணாகின்றனர், அவர்கள் வாழ்வு சாவால் விழுங்கப்படுகிறது.

தான் பூரணமடைந்து உலகிற்கு நன்மை செய்தே இவ்வாழ்வைக் களைப்பவன் உலகின் மனதில் கோயிலமர்ந்துள்ளான். உலகம் கடவுட்சித்தி பெறுதற்கேற்ற அறப்பணியை உறுதியாகப்பற்றி எல்லா இடர்களையும் பொறுத்தே முடிக்கவேண்டும். இடர்களின்றி எக்காரியந்தான் உலகில்முடிந்தது? ஆண்டவனைச் சிரமேற்கொண்டே நமது பணியை முடித்தல் வேண்டும். நமது உடற் பொருளாவி அவன் ஈகையே. அதை அவனுக்கு அர்ப்பணித்தே அருள் தொண்டாற்றவேண்டும். அதன் பிறகு நம்முடலுக்கு வரும் நன்மை தீமைகளுக்கு அவனே பாத்தியம். தன்னை ஈயனுக்கே அர்ப்பணித்ததனாலன்றோ அப்பருக்கு நீற்றறையும் குளிர்ந்திருந்தது, மதயானையும் வணக்கஞ்செய்தது. கல்லும் தெய்வமானது. இவையெல்லாம் நிகழ்ந்தது எப்படி? அவர் அன்புமிருக பலத்தை எப்படி வென்றது? இதற்கு அப்பரே தோன்றாத் துணையாக அன்பன்கள் பாலிருக்கும் கடவுளே, ஈன்றாளும், தந்தையும், சுற்றமுமாய் என் மனதுடன் இருந்ததே என் இடர்களைத் தாட்டுவித்தான்" என்கிறார், அப்பர் கைலாயத்திக்குப் போகும்போது தளர்ந்து, தேய்ந்து, கால் கை, மார்பு எல்லாம் அறைபட்டுக் கிடக்கையிலும் "இனி நீங்கள் மீண்டு போவதே கடன் என உறைத்த சிவ முனியை,

வாளுநாயகன் கயிலையினிருக்கை கண்டல்லால்
மாளுமிவ்வுடல்கோண்டு மீளேனென மறுத்தார்.

இத்தகைய உறுதியோடன்றோ நாம் நம் அறப்பணியாற்ற வேண்டும்! உலகிற்கு நலஞ் செய்யும்பொருட்டு தன்னைப் பூரணப் படுத்தி பகவான் புத்தர் போக இன்பங்களை யெல்லாம் துறந்து சென்றது எதனால்? "பகைவருக்கன்பே பரிந்து காட்டுக" என்று உபதேசஞ் செய்த ஏசுநாதர் தன் கொள்கைகள் உயிரினும் பெரியன என்பதை உறுதிப்படுத்தப் பாரகரின் கையில் சிலுவைப்பட்டிறந்தது எதனால்? அருட்பணியென்னும் பலிபீடத்தில் தன்னை பலி கொடுத்தேனும் மனித சமூகம் முழுதையும் காக்கவேண்டுமென்ற நோக்கத்தாலன்றோ! உலகைக் காக்கவன்றோ! ததீசி முனிவர் தன் முதுகெலும்பையும் இந்திரனுக்கு ஈந்தார். இத்தகைய தியாகமே மனித வாழ்வில் அரிய மாண்புள்ளதாகக் கருதப்பட்டு, கவிகளால் பாடப்பட்டு, அன்பரால் தொழப்பட்டு, மனிதரால் உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்டு வருகிறது. இந்தத் தியாகத்தின் பிறகே மனிதன் சுத்தமாகிறான், வீரனாகிறான்.

"ஆரங்கண்டிகை, ஆடையுங்கந்தையே
பாரமீசன் பணியல தொன்றில்லை
ஈர அன்பினர் யாதுங் குறைவிலர்
வீரனென்ன விளம்புந் தகையரோ!"

ஈசன் பணியொன்றையே சுமந்து, அன்புமிகுந்து, யாதுங் குறைவின்றி யிருக்கும் சுத்த வீரர்கள் பிறந்த இப்பாரத கண்டத்தில் தியாகமே தர்மமாக விளங்குகிறது. ஒரு குடும்பத்தை விடுத்து உலகக் குடும்பத்திற்குத் தொண்டு செய்த துறவிகள் எத்தனைபேர் நமக்கு வழிகாட்டிகளாக நிற்கின்றனர்! தன்னலப்பற்றைவிடுத்தலே தியாகம், உலகம் பழித்ததை யொழித்துவிட்டால் மழித்தலும் நீட்டலும் எதற்கு? சர்வ சங்க பரித்யாகம் என்பது, மனப்பற்றை யொழிப்பதேயாகும். ஸங்யாசவாட்சி வேண்டுவதில்லை. உலகிலிருந்தே உலகற்றிருக்கலாம்.

மனத்தில் அருள்மல்கி மண்ணுலகை முய்யுந்
தனைத்துறந்த தொண்டே தவம்,

இத் தன்னயமற்ற தொண்டைச் செய்வதே வாழ்வின் நோக்கம்.

'இகலற்று' உயிர்க்கெலாம் இன்புறு நேயராய், அருளே, பூண்டு, அகந்தை விலக்கி, நலமுந் தீதும், சமமாய்ப்பொறுத்து, என்றுங்களிப்பும் உறுதியும் எய்தி, தன்னையடக்கி, என்னுள் அறிவை நிலைப்பித்து அன்பு செய்து, பலத்தில் நெஞ்சப்பற்றிலாத நின்மலர், என்னவர்' என்று கண்ணன் கீதையிற் கூறுகிறான். இப்பாதை வழியாக நடந்து கடவுளுடன் கலப்பதே வாழ்வின் நோக்கம். இது தன்னலக் கலப்பல்ல. கடவுளை உள்ளத்தும். உலகிலும் கலத்தல் வேண்டும்.

மனிதர் தாம் செய்யும் வினைகளுக்குத் தக்கபடியே, விலங்குகள், மனிதர் தேவர் என முப்பகுப்பெய்துவர். சினமும் வெறியும், பேராசையும் தூண்டும் தீவினையுடையாளர் விலங்குகளேயாவார் அறவழி யொழுகி, தன் மானம்போற்றி, தன் இல்லிற்கும், நாட்டிற்கும் ஆகிய தொண்டைச் செய்து நிற்பவர் மனிதர். அனைத்தையுந் துறந்து, அருட்பணியிலேயே தன்னைக் கரைத்துப் பிறர் நோவுறுத்தினும் தான் பிறரை நோவுறுத்தாத சீலமுடையோர் தேவர். இந்த தெய்வப்படியை எட்டுவது நமது வாழ்வின் முயற்சியாகும். வாய்மையும் நலனும் நோன்பும் அருட்பணியும், அடக்கமும் கொண்டு தூயராக, தூய வடிவாய்த் துலங்குஞ் சோதியான இறைவனை அடைய இவர்களே உரியர்.

அன்பர்காள், ஒரு நதியானது பல வாய்க்கால்களாகப் பிரிந்து உலகை யெல்லாம் செழிப்பித்துப் பிறகு குறுகி, சமுத்திரத்தில் விழுகிறது. விளக்கானது தன் எண்ணெயுந் திரியும் தேய்வதை எண்ணாது உலகிற்கு ஒளிதருகின்றது. எத்துணை மேகங்கள்வந்து தன்னை மறைத்தாலும் பாராட்டாது சூரியன் உலகில் ஒளி பரப்புகின்றான். நீண்ட இரவே வந்து தன்னை மறக்கினும் மறுபடியும் புலர்ந்து உலகிற்கு ஒளியையும், சூட்டையும், மழையையுந் தருகிறான். அதுபோன்று எத்துணை இடர்வரினும் தளராது உலகிற்கு நாம் செய்யவந்த பணியிலேயே நமது உடலையும், மனதையும், பொருளையும் கரைத்துவிட்டால் மீதியிருப்பது கடவுளேயாகும். அப்பொழுதே,

உறவுந் துணையும் ஒளியாம் உன் ஆன்மா
பிரிந்ததையாய்ப் பொன்றும் பிற,

(தொடரும்)

உ

# மேவாரின் மேன்மை.

M. S. சுப்பிரமணிய அய்யர்.

மேவார்நாடு, மத்தியபதி மேதஸ்பதி எனவும் சொல்லப்படும். தலைநகரின் பெயரைக்கொண்டு தற்சமயம் அதனை உதயபுரி என்று அழைக்கின்றனர் முன்னம் அந்நாட்டின் தலைநகராகத் தலைசிறந்தது சித்தூரே. அந்நாட்டரசர் ராணா எனப்படுவர். எண்ணூறு வருஷகலமாக அந்நாட்டில் நிலையாக முடி மன்னர் வாழையடி வாழையாக ஆட்சி செலுத்தி வருகின்றனர். சரித்திர வாயிலாகச் சிறப்புற்ற அந்நாட்டின் முதலரசன் பப்பன், அல்லது பூபசிம்மன் எனப்படுவான்.

எட்டாவது நூற்றாண்டிலே மேவாரில் முடிமன்னவனாக விளங்கியவன் பூபசிம்மனே. அக்காலம் அரேபியர் ஒரு பெரும் படையுடன் வந்து சிந்து தேசத்தில் புகுந்து, அதனை அடிப்படுத்தி, இராஜபுதனத்திலும் புகமுயன்றனர். அந்த அரேபியப்படை வெள்ளத்தைத் தடுத்து நின்று புறங்கண்ட பெருமை பூபசிம்மனைச்சாரும் பூபசிம்மன் என்றால் இன்னும் இராஜபுத்திரர் பெருமையாகப் பேசுவர். அப்பூபனுக்குப்பின் பெரும் கீர்த்திவாய்ந்தவன் கோமான் எனப்படுவான். தசை நாட்டின் நலத்தைக் கருதி அக்கோமான் புரிந்த போர்கள் இருபத்திநான்காகும். ஒவ்வொரு போரிலும் அவன் வெற்றிமாலை கொண்டே திரும்பியவன். இராஜபுதனத்தில் யாரேனும் ஒருவன் ஆழந்தெரியாமல் ஒரு காரியத்தில் காலிட்டுக் கொள்ளின், கோமான் வந்து காப்பாற்றுவானோ என்றுசொல்வதுண்டு.

அக்கோமானுக்குப் பின்னர் அரும் புகழ்படைத்தவன் சமரசிம்மன் எனப்படுவான். முகம்மதுகோரியை எதிர்த்துநின்ற பிருத்விராஜனுக்குத்துணை போனவர்களில் சமர சிம்மன் சாலச் சிறந்தவன். பதிமூன்றாம் நூற்றாண்டிலே பக்மினி என்னும் பெண்ணரசியைக் காண ஆவல்கொண்ட பட்டாணியப் பார்த்திபனான அல்லாவுதீன் என்பான் அம்மேவாரின்மீது பெரும் படைகொண்டு சென்றது

பிரசித்தம். அச்சமயம் சித்தூர் சின்னாபின்னம் ஆனது உண்மையே. ஆயினும், அந்நாடும் நாட்டு மக்களும் தம் இயற்கைக் குண விசேஷத்தைக் கைவிடவில்லை. மாடு இளைப்பினும் கொம்பு இளைக்குமோ?

மேவார் மன்னவரிலே இன்னொருவன் மகாராணா கும்பகர்ணன். அக்கும்பன் தனது அயலக முகம்மதியவரசுகளை வாட்போரில்வென்று, வெற்றிமண்டபம் கட்டிய கீர்த்தியாளன். (இன்னும் அவ்வெற்றி மண்டபத்தின் சின்னங்களைச் சித்தூர்நகரில் காணலாம்.) மொகலாயமரபினர் இந்தியாவில் நாடுகொள்ள நாட்டங்கொண்ட காலையில், மத்தியபதியை பரிபாலித்து வந்தவன் சங்கரசிம்மன். இவனுடன் பாபர் சக்கிரவர்த்தி நெடுநாள் போர் செய்ய நேர்ந்தது. முதலிலே அப்பாபர் தோற்றுப்போயினன். அதன் விளைவாக மகாராணா சங்கரசிம்மனுடன் சமாதானம்பேசவும் பாபர்முயலாநின்றான். முடிவில் சங்கரனது படைத்தலைவனொருவன் துரோகம் புரிந்ததினால், பாபர் வெற்றிமாலை சூட, இத் தேசத்திலே மொகலாய அரசு நிலைக்கலாயிற்று.

எட்டாவது நூற்றாண்டு முதல் பதினெட்டாவது நூற்றாண்டு வரையில் ஓராயிரம் ஆண்டுகாலும் முகம்மதிய அரசுகளுடன் சளைக்காமல் சமர் புரிந்துவந்தது மத்தியபதி ஒன்றேயாம். மொகலாய சக்கரவர்த்திகளில் சிறந்த அக்பருக்கு முடி வணங்காதிருந்தவன் மத்தியபதி மன்னவனான பிரதாபசிம்மன். இப்பிரதாபனுடன் அக்பர் இருபத்தைந்து ஆண்டு ஓயாப் போர் நடத்தினான். எனினும் மேவார் நாட்டிறைவனை வணங்கச் செய்ய அக்பரால் ஆகவில்லை. பிரதாபனது போராண்மையும் பெருவீரமும் கண்டு அக்பர் சக்கிரவர்த்தி திகைத்துப்போயினன்.

பிரதாபன் என்ற பெயரைக்கேட்டால் மத்தியபதியிலே அனைவரும் முடி சாய்த்து நிற்பர். அப்பெருவீரன் தன் பெயரைக் காரணப் பெயராக்கிக்கொண்டவன். அவன் சரிதம் அடுத்த அதிகாரங்களில் பேசப்படும். இன்றும் நாளையும் மத்தியபதி மன்னவரையே ஏனைய இராஜபுத்திரர் தம் குலத் தலைவன் என மதியாநிற்பர். அந்நாட்டரசருக்கு ஹிந்துபதி, ஹிந்துசூரியன் எனும் பட்டப்பெயர்கள் உண்டு.

(தொடரும்.)

# மாதர் மனநிலை.

(தமிழ்த்தொண்டன்)

பெண்களின் மனம் நன்னெறியை விட்டு விலகிச்செல்லும் இயல்புடையதென்று தற்காலக் கல்வியறிவு பெறாத நம்மவர் பலரும் நம்புகின்றார்கள். உண்மையில் இக்கொள்கை நமது நாட்டிலே அதிபுராதனகாலத்தில் காணப்படவில்லையென்று கூறலாம். வட நாட்டிலே வேதகாலத்திலும் தென்னாட்டிலே சங்ககாலத்திலும் பெண்கள் கௌரவமாக மதிக்கப்பெற்றனர்

பெண்மனம் வேறு, ஆண்மனம் வேறு; இவற்றுள், ஆண் மனம் மேலானது, பெண்மனம் இழிவானது—என்ற கொள்கை, தொல்காப்பியர் காலத்திலாவது வேதமுனிவர்கள் காலத்திலாவது இந்தியாவில் வழங்கவில்லை. இக்கொள்கை பண்டைத்தமிழர் கொள்கை அன்று—என்பது சங்கநூலாராய்ச்சியால் தெளிவாக அறியப்படும்.

“மஞ்சர்க்கும் மாதரார்க்கும்
மனமென்ப தொன்றே அன்றோ ?” (கம்பன்)

என்பது உண்மையில் பண்டைப் பழங்காலத் தமிழ்க்கொள்கையே யாகும். இது, கம்பன் வாக்காக இருந்தபோதிலும், கம்பன் காலக் கொள்கையன்று.

ஆடவர்களுக்கும் மகளிர்களுக்கும் மனம் என்பது ஒரு தன்மையதே ! இது எவ்வளவு உயர்ந்த கொள்கை ! எவ்வளவு உண்மையான கொள்கை ! இது பண்டைக்காலத் தமிழர்கொள்கை! ——கம்பன்காலத்திற்கு முன்னமே தமிழ்நாட்டில் மறைந்து

போன கொள்கை! திருவள்ளுவர் காலத்திலேயே மகளிர்மனம் வேறு; மைந்தர் மனம் வேறு என்ற கொள்கை தமிழ் நாட்டிலே தோன்றிவிட்டது. மகளிர் மனம் இழிவானது என்ற கருத்தும் இக்கொள்கையின் முக்கிய அம்சமாகத் தோன்றலாயிற்று.

இக்கொள்கை எவ்வாறு விளைந்தது? இதன் வித்து இதிகாசத்திலேயே வடநாட்டில் தோன்றிவிட்டதென்னலாம். வடமொழியின் ஆதிகாவியம் என்று மதிக்கப்பெறும் வால்மீகிராமாயணத்திலே இவ்வித்தைக் காண்கிறோம். ஸ்திரீகள் இயற்கையாகவே துஷ்டபுத்தியுள்ளவர்கள்—என்ற விபரீதக்கொள்கை வடமொழியின் ஆதிகவியான வால்மீகி மகரிஷியின் தெய்விக உள்ளத்திலேயே இடம் பெற்றுவிட்டது!

இக்கொள்கையை உள்ளத்திலே கொண்ட ஆரிய முனிவர், கௌதம முனிவனது மனைவியும் ஜனகமகாராஜாவுக்குப் புரோகிதனான சதானந்த முனிவனது தாயுமான அகலிகையின் கதையைக் கூறும்போது, அவள் தேவராஜா என்று தெரிந்ததும் குதூகலத்தோடு சம்மதம் செய்தாள் என்று வருணித்துச் செல்லுகிறார். இக்கொள்கை தமிழ்நாட்டிற்குப் பொருத்தமானதன்று எனக்கண்ட கம்பன், அகலிகைவரலாற்றை ஒருவாறு மாற்றி, கௌதம முனிவனது வடிவத்தை எடுத்துக்கொண்டு வந்த தேவராஜாவால் அவள் ஏமாற்றப்பட்டாள் என்று கூறியுள்ளான்

"தீவினை நயந்து செய்த
தேவர்கோன்"
"மையலால் அறிவு நீங்கி
மாமுனிக் கற்றம்*செய்து
பொய்யிலா உள்ளத் தான்¶தன்
உருவமே கொண்டு புக்கான்"

என்று இந்திரனையும்,

* அற்றம் = பிரிவு. ¶ பொய்யிலா உள்ளத்தான் = கௌதம முனிவன்

"அன்னையே அனையாள் §"
"நெஞ்சினுல் பிழைப்பிலாள்"
என்று அகலிகையையும், கம்பன் வருணிப்பது காண்க.

இவ்வாறு வால்மீகியின் அகலிகை வரலாற்றைக் கம்பன் ஒரு வாறு மாற்றிச் சித்திரிப்பதற்குக் காரணம் என்ன?

மாதர் மனநிலை விஷயமாகக் கம்பன் கொண்ட கருத்து வேற்றுமையே யன்றே? இக்கருத்து வேற்றுமை, பண்டைத் தமிழர் கொள்கையைத் தழுவியது என்னலாம். அக்கொள்கை யைத் தழுவி யெழுந்த அபிப்ராய பேதம், அகலிகை வரலாற்றைத் தமிழ்ப்பெருமக்களின் உயர்ந்த லட்சியங்களோடு இசைவித்து அமைக்கும் ஆசையோடு இரண்டறக் கலந்துவிடுகின்றது!

வேறொரு சந்தர்ப்பத்தில், திருமால் தவஞ்செய்ததால் பரிசுத்தம் அடைந்திருந்த 'சித்தாச்சிரமம்' என்ற சோலையை வருணிக்கும்போது, கம்பன்,

"மங்கைமார் சிந்தை போலத் தூயது"—அதாவது, அச் சோலை பெண்களின் மனம்போலப் பரிசுத்தமானது, என்று கூறியுள்ளான். இதனுல் மாதர் மனநிலையைக் குறித்துப் பொதுவாகத் தமிழரும் சிறப்பாகக் கம்பனும் எவ்வளவு கௌரவமான அபிப்பிராயம் கொண்டிருந்தனர் என்பது புலனுகும்.

எனினும் இப்பெருங்கொள்கை தமிழ்நாட்டில் நசித்துப் போயிற்று. இதற்கு ஒரு காரணம், வால்மீகி தொடக்கமான ஆரிய முனிவர்கள் பெண்மையை இழிவாக மதித்து வெளியிட்ட அபிப்பிராயம். ஆரிய முனிவர்களின் அபிப்பிராயம் ஜைனமுனிவர்களிடையே இன்னும் அதிக விபரீத நிலையை அடைந்தது.

"பெண்ணெனப் படுவ கேண்மோ
பீடில் பிறப் புநோக்கா
உள்நிறை உடைய அல்ல
ஓராயிரம் மனத்த ஆகும்

§ அனையாள = ஒத்தவள்.

எண்ணிப்பத்(து) அங்கை இட்டால்
இந்திரன் மகளும் ஆங்கே
வெண்ணெய்க்குன்(று) எரியுற்றாற்போல்
மெலிந்துபின் நிற்கும் அன்றே"

என்பது ஜைனமுனிவரும் சிந்தாமணி ஆசிரியரும் ஆன திருத்தக்க தேவர் கொள்கை.

பெண்ணுக்குப் பெருமை இல்லையாம்; நிறை இல்லையாம். பெண்மை பிறப்பு நோக்குவதில்லையாம். ஒரு பெண்ணுக்கு ஒருமனம் இல்லையாம்; ஆயிரம் மனம் உண்டாம். அதாவது, பெண் மனம், ஆண்மனத்தைப்போல் ஒரு வழியில் நிற்பதில்லையாம்; அது ஆயிரம் வழிகளில் ஓடி அல்லற்படுமாம். இவ்வாறு ஜைனமுனிவர்கள் கூறுவாராயினர். இவர்கள் தமிழ்நாட்டில் செல்வாக்கோடு இருந்த காலம் தொடங்கி, 'பத்துக்கு மிஞ்சிய பதிவிரதை இல்லை' என்ற ஒரு மூடத்தனமான வசனமும் பழமொழியாக வழங்கலாயிற்று.

கம்பனோ இக்கொள்கையை மறுத்து, தனது இராமராஜ்யத்தில் "வேசையர் உள்ளமும் ஒரு வழி" ஓடியதென்று கூறுகிறான். இங்ஙனம் இயற்கையாகவே தூய உள்ளம் பெற்றிருக்கும் பெண்மணிகள் அவ்வுள்ளத்தை தக்க கல்விப்பயிற்சியாலும் பண்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் என்பது கம்பன் கருத்து.

அறிவுச் சுதந்திரத்தோடு பொருளாதார நிலையிலும் பெண்கள் சுதந்திரம் பெற்று வாழ்வது நன்று. பெண்களுக்கு அழகைப் போல் அறிவுப்பொருளும், செல்வப்பொருளும் அவசியமானவை. அழகும் செல்வமும் கல்வியும் பூத்த பெண்மணிகள் தாங்கள்வாழும் நாட்டை ஓர் அறப்பெருங் கோவிலாகச் சமைப்பர். இக்கருத்து,

"பெருந்த டங்கண்—பிறை நுதலார்க்கெல்லாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே"

என்ற கம்பராமாயணச் செய்யுளில் இனிது புலனாகின்றது. இந்நிலைமை வாய்ந்த மகளிர் கண்கள் சமூகவாழ்க்கையைச் சீர்திருத்தும் சிறந்த மனநிலையினை வெளியிடுவனவாகும்.

நமது சிறுகதை.

# முரண்பாடு.

"வியன்"

## I

'காதலாவது, உருளைக்கிழங்காவது!' என்று சிலர் எண்ணுகிறார்கள். ஏன்? என்னுடைய உண்மையான அபிப்பிராயமும் அதுவே. என் சம்பந்தப்பட்டவரையில் அது அனுபவ பூர்வமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. ஆகையால் வேறுவிதமான கொள்கையை ஆதரிப்பது எனக்கு அடாது. எனக்கு மனமுமில்லை. காதற்கடிதங்களோ, அச்சுவை ததும்பிய சம்பாஷணைகளோ எனக்கு வேதபாராயணம் செய்வதைப் போலவேயிருக்கிறது. அவ்வளவும் அசம்பாவிதமாகவும் கற்பனையாகவும் தோன்றுகிறது. ஆனால் சுப்புராவ் அதை அண்டத்திற்கும் ஆகாயத்திற்கும் ஒப்பிட்டுப் பேசுகிறான். அதற்கு வரம்புகட்ட முடியாதாம். முதற்கடவுளின் முழுமுதற் பரிசாம் மன்னுயிர்க்கு, அந்தக்காதல். மனித வாழ்க்கைக்கு அதுவோர் இன்றியமையாத சாதனமாம். இன்னும் பலவாம். உதாரணங்களுக்கு ஏடுகளைத் திருப்பிவிடுகிறான்.

'அவ்வளவும் மானஸீகத் தோற்றமும், இரத்தக்கொழுப்புமே தவிர வேறில்லை' என்றேன்.

'யார் சொன்னது? அவ்வளவும் தெய்விகம். நம்மாலாவது ஒன்றுமில்லை' என்றான் சுப்புராவ்.

உஷ்ணம் அதிகரித்தது. ஒருவர் மேல் ஒருவர் விழவேண்டியதுதான் பாக்கி. உபாத்தியாயர் கட்டிடத்திற்குள் நுழைந்துவிடவே, எங்கள் பேச்சு அத்துடன் முற்றுப்பெற்றது. ஒழுங்காக பாடம் துவக்கப்பட்டது.

*　　*　　*　　*　　*

பலவருஷங்கள் சென்றுவிட்டன. நான் கல்லூரியில் பி. ஏ., வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தேன். ஒரு விடுமுறை சமயம் என் மாமன் வீட்டிற்குச் சென்றேன். நான் அப்படிச் சொல்வதால் எனக்குச் சொந்த வீடு வேறு இருக்கிறது என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். அப்படிக்கொன்றும் கிடையாது. அதை விவரமாக முதலில் சொல்லிவிடுகிறேன்.

நான் பிறந்த முதல் வருஷத்திலேயே என் பெற்றோரை விழுங்கிவிட்டேன். நான் மிகுந்த அதிஷ்ட சாலியல்லவா? உடன் பிறப்பும் ஏதுங்கிடையாது. ஆகவே என் மாமன் சௌந்திரராஜ முதலியால் வளர்க்கப்பெற்றேன். என்னுடன் பிறந்தவளோவெனப் பிறர் ஐயுறும்வண்ணம் என் மாமன் மகள் கமலா என்னுடன் வளர்ந்தாள். நாங்கள் ஒன்றாகவே சாப்பிடுவோம்: ஒன்றாகவே விளையாடுவோம், ஒன்றாகவே உறங்குவோம். ஒருவரையன்றி மற்றவரைக் காண்பது குதிரைக் கொம்பிலும் அரிது. வெகு நாள்வரைக்கும் அப்படியேயிருந்தோம். வயதாகிவிட்டபொழுதுங் கூட முன்னைய நாட்களைப் போலவே சந்தோஷகரமாகவே கழித்தோம்.

இம்முறை நான் வந்தபொழுது முன்போலவே இருப்பாளென்று இன்பக்கனவு கண்டுகொண்டிருந்தேன். ஆனால் முடிவில் எனக்கு ஏமாற்றமாகவே முடிந்தது. என்னை யன்னிய அவள் பயந்தாற்போல தோன்றியது. பயந்தாற்போல என்று சொன்னேன். ஏனென்றால் அவள் இச்சைக்குமாறாக கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறாளென்று அவள் நடவடிக்கைகளால் கண்டுகொண்டேன். நான் இருந்தவிடத்தின் சமீபமாக நாறுதடவை சென்றாள். ஆனால் என்னிடம் பேச எத்தனிக்கவில்லை. கண்கள் மாத்திரம் மருண்ட பார்வையாய் என் பக்கம் நோக்கின. இதை யறிந்ததும் என்மனதில் ஏதோ 'சுருக்' என்று தைத்துக்கொண்டாற்போல விருந்தது. எனக்கே யதன் காரணம் முற்றிலும் விளங்கவில்லை. கடைசியில் பால்ய சினேகத்தின் நினைவினால் மனது அப்படி வாதைப்படுகிறது என்று சமாதானம் செய்துகொண்டேன். என்றாலும் என்மனது சாந்தமடையவில்லை. பின்னும் அந்த விஷயத்தையே பற்றிச்சிந்திக்கலானேன். என் போதாக்காலம்தான் அப்படி அவளைப் பராமுகமாகச் செய்திருக்கவேண்டும் என்று எண்ணினேன். இன்னும், கமலா, வயது வந்துவிட்டவளாதலால், அன்னிய புருஷனிடம் அதிகமாக அளவளாவுவது லோகாபாவத்திற்கு இடமாகுமென்று எண்ணி அப்படி விலகியிருந்தாலும் இருக்கலாம் என்று நினைத்தேன். எதற்கும் போகப்போகப்பார்க்கலாம் என்று தீர்மானம் செய்துகொண்டு நிஷ்களங்கமான மனதுடனிருப்பவன்போலவே நடித்தேன்.

ஒரு நாள் மாலைநேரத்திலே நான் சீக்கிரமாகவே வெளியே புறப்பட்டு போனேன். அன்று என் வேலையும் சீக்கிரத்தில் முடிந்துவிடவே, உடனே வீடு வந்துசேர்ந்தேன். வீட்டில் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. ஒன்றிரண்டுவேலைக்காரர்களைத் தவிற வேறு

யானரயும் வெளியே காணேம். அவர்களிடம் கேட்டதில், மாமன் மாமி முதலியவர்கள் எல்லோரும் ஏதோ கலியாணவீட்டிற்குத் தாம்பூலம் வாங்கிக்கொள்ளப் போயிருக்கிருர்களென்றும், கமலா மட்டும் உள்ளே யிருக்கிருள் என்றும் சொன்னுர்கள். மேலும் அதைப்பற்றி யோசிக்காமல் என் அறைக்குச்சென்று ஏதோ எழுத வாரம்பித்தேன். அப்பொழுது கமலா தன் அறையில் வீணையை மீட்டி, பாடத்துவக்கினுள். அந்த ஆனந்த சங்கீதத்தில் சற்று நேரம் லயித்து மெய்மறந்திருந்தேன் பின்னர் ஆசனத்தைவிட்டெழுந்து, வீணை வாசிக்குமிடத்தை நாடிச்சென்றேன். அங்கே, அழகே வடிவெடுத்தாற் போல் ஓர் அழகிய மஞ்சத்தில் கமலா வீணை வாசித்துக்கொண்டிருந்தாள். முதலில் நான் வந்ததை அவள் கவனிக்கவில்லை. நான் ஒரு தடவை கனைத்துக்கொண்டேன். நிமிர்ந்து பார்த்த பொழுது நான் எதிரே நிற்கக் கண்டாள். உடனே, நாணத்தினுல் மஞ்சத்தை விட்டெழுந்து 'அத்தான் வர வேண்டும்' என்று வாய் குழறச்சொன்னுள்.

"ஏது கமலா, இப்பொழுது அதிகமாக படித்துவிட்டாற் போலிருக்கிறதே. முன்னெல்லாம் போலவில்லாமல் லஜ்ஜை கிஜ்ஜை யெல்லாம் வந்திருக்கிருய் போலவிருக்கிறதே!' என்றேன்.

"அதொன்றுமில்லை" என்ருள்.

"மாமா, மாமி எல்லோரும் கலியாணத்திற்குப் போயிருக்கிருர்கள் போலிருக்கிறது"

"ஆம் சற்று நேரத்தில் வந்து விடுவதாகச் சொன்னுர்கள்"

"அது சரி. நீ ஏன் இந்தத்தடவை என்னுடன் பேசவேயில்லை? நான் என்ன குற்றம் செய்து விட்டேன்?"

"ஒன்றுமில்லை சும்மாதான்"

"ஓகோ! பெரியவளாகிவிட்டாயல்லவா? ஒருவேளை என் சிநேகம் வெறுப்பாய்த் தோன்றியிருக்கலாம்"

"அத்தான்! நம் சிநேகம் இன்று நேற்று ஏற்பட்டதா? நம் குழந்தைப்பருவமுதல் ஏற்பட்டதன்ருே! அதற்கொருநாளும் பங்கம் வராது. தொட்டிற் பழக்கமல்லவா?"

"பின் ஏன் இப்பொழுது முன்போல் சாதாரணமாக என்னுடன் பேச பயப்படுகிறாய்?"

"நாமென்ன, என்றும் சிறு குழந்தைகளா? வீட்டில் பெரியவர்கள் என்ன சொல்வார்கள்?"

"நீ சொல்வது உண்மைதான். ஆனால் என்விஷயத்திலுமா அப்படியிருக்கவேண்டும்?"

"ஏன், சொந்த சகோதாரிடத்தும் கூட அப்படித்தான் இருக்கவேண்டுமென்று எத்தனையோ தடவைகள் தாங்கள் எடுத்துக் கூறியிருப்பதை மறந்துவிட்டீர்களா?"

"அது சரி. இன்று காலை ஒரு சமாசாரம் கேழ்விப்பட்டேன். உனக்குக் கலியாணம் என்பதாகப் பேசிக்கொண்டார்கள். அது விஷயமாய் உனக்கு ஏதாவது தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன்."

கமலா சற்று நேரம் மௌனமாயிருந்துவிட்டுப் பிறகு பேசவாரம்பித்து,

"ஆம். என்னவோ பேசிக்கொள்கிறார்கள். என்மாமன் மகனுக்கு என்னைக் கொடுக்கவேண்டுமென்பது அவர்கள்ஏற்பாடு."

இதற்குள் ஆள் அறவம் கேட்கவே, மறுநாள் மாலையும் இவ்விதமே சந்திக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்ட பின்னர், நான் பூனைபோல் வெளியே சென்றுவிட்டேன்.

அன்றிரவு எனக்கு உறக்கம் பிடிக்கவில்லை. உணவும் சரியாக உட்கொள்ளவில்லை. காய்ச்சல்க்காரனுடைய தேகஸ்திதியை ஒத்திருந்தது என் தேகநிலை. 'விண்' 'விண்' என்று மண்டையிடித்தது ஒரு புரம். என் மார்புப்பிரதேசத்தில் சரியான வசதியிருக்கும் பக்ஷத்தில் ஒருகோட்டை நெல் குத்தப்பட்டு அரிசியாக மாறியிருக்கும்—அவ்வளவு பலமாக இருதயம் அடித்துக்கொண்டது. தேகம் கட்டு மீறி நின்றது. சிரம் சுழன்றது. ஒன்றும் தெளிவாக யோசிக்கமுடியவில்லை.

அன்று மாலை நடந்த விஷயங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் என் அகக்கண்களுக்குப் புலனாயின. கமலத்தினிடம் நான் தனியாகப் பேசியதும், அவள் தனக்குக் கலியாணம் என்ற விஷயத்

பாகம் 2.

உ

கஜபதிசிங் அல்லது

# மேனாட்டுத் துப்பறிபுவன்.

K. சங்கரநாராயணன்

(304ம் பக்கம் தொடர்ச்சி.)

"ஆகாரங்கள் பொருமான வைகளாயும் நாணயமுள்ள வைகளாயும் இருந்தால் கடன் கொடுப்பதற்குத் தயங்க மாட்டோம். கடன் விஷயங்கள் கொடுக்கிறவர்களுக்கும் வாங்குகிற வர்களுக்கு மட்டுமே தெரியவரும்."—என்றேன்.

"இப்பொழுது எனக்கு ரூ. 50,000 அவசியமாகவேண்டும். இதைப்போல் பத்துமடங்கு பணம் எனது நண்பர்களிடமிருந்து பெறக்கூடிய நிலைமையுள்ளவனாக இருக்கின்றபோதிலும், வியாபாரமுறையை அனுஷ்டிக்க விரும்புகின்றேன். என்போன்றவர்கள் பல நபர்களிடம் கடன் வாங்கிக்கொண்டு, வேண்டாத துன்பங்களை தலைமீது வைத்துக்கொண்டு திரிவது மூடமதி. ஆகையால் உங்களை நான் தேடிவந்தது மிகவும் ரகசியமாகத்தான்." என்றார்.

"இதைப்பற்றி கவலைப்படவேண்டாம். எவ்வளவு பெரிய தொகையாயிருப்பினும் ஒரு நொடிக்குள் செலுத்திவிடுவேன். எப்பொழுது திருப்பிக்கொடுப்பீர்கள்?"——என்றேன்.

"அடுத்த திங்களன்று எனக்குப்பணம் வந்து விடும். உங்களுடைய கடனையும் தவறாமல் அன்றையதினம் செலுத்திவிடுகின்றேன்."—என்றார்.

"உங்களுடைய பரிதாபகரமான நிலைமையைப் பார்த்து எனது ஹிருதயம் துடிக்கிறது. ஆகையால் எனது சொந்தப் பணத்திலிருந்தே நீங்கள் கேட்கும் தொகையை அளிக்கின்றேன். பாங்கிலிருந்து கடன் கொடுப்பதாயிருந்தால் மனதுக்கு வெறுப்பான சில ஒப்பந்தங்கள் செய்யவேண்டிவரும். மேலும் வெளியில் பரவாமலிருப்பது சாலவும் நன்று"—என்றேன்.

"அடமானம் 2 லட்சம் ரூபாய் விலை மதிப்புடையது. அது மட்டுமன்று. எங்கள் குலத்தின் பொக்கிஷமாய் இருந்து வருகின்றது. எங்கள் வம்சம் தோன்றிய நாள்முதற்கொண்டு, எங்கள் குலமன்னர்களின் முடியைச் சிங்காரித்து வந்திருக்கும் மரகதக் கிரீடத்தைக் கொண்டுவந்திருக்கின்றேன். உங்களுடைய சொந்தப் பணத்தை அளித்தால் நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன். இவ்விஷயம் எவ்வளவுக்கெவ்வளவு மர்மமாக இருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு நலந்தான்"—என்று கூறிக்கொண்டே மீசையைத் திருகினார்.

"விஷயம் ரகசியமாகவே இருக்கும்." என்று நான் கூறினதும், தான் கொண்டுவந்திருந்த டிரங்குப் பெட்டியைத்திறந்து, அதற்குள்ளிருந்த தந்தப்பெட்டியை எடுத்தார். அதைத்திறந்து பளபளப்பான பட்டுத்துணியால் நன்றாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஓர் கிரீடத்தை எடுத்தார். என் கண்கள் மழுங்கிவிட்டன. அம்மரகதக் கிரீடத்தின் ஜோதி என் ஹிருதயத்தைக் கலக்கிற்று. அக்கிரீடத்தை கரத்தில் வைத்துக்கொண்டு, "இம் மரகதக்கிரீடத்தில் 39 மரகதங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. இம்மரகதங்களைத் தவிர கிரீடத்தின் தங்க மதிப்பு மாத்திரமே நீங்கள் கொடுக்கப் போகும் பணத்தைப்போல் இருயடங்கு மதிப்புடையது. இதை உங்களிடம் அடமானமாக வைத்துச் செல்கிறேன். ஆனால் விஷயம் மாத்திரம் மிகவும் ரகசியமாக இருக்கவேண்டும்.", என்று ஆத்திரத்துடன் கூறினார். அக்கிரீடத்தை நான் கரத்தில் வாங்கிப் பார்த்தேன். விலை மதிப்பிடமுடியாதபடி அதன் பிரகாசம் எனது நேத்திரங்களைப் பறித்தன

"நீங்கள் அதன் மதிப்பைப்பற்றி சந்தேகப்படுகின்றீர்களா?", என்று கேட்டார்.

"இல்லை. ஆனால்....?", என்று நான் உரைப்பதற்குமுன், "உங்களிடம் அடகு வைப்பதைப்பற்றியோ? அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். இன்னும் நான்கு தினங்களில் பணத்தைக்கொடுத்து அதைத் திருப்பமுடியாவிட்டால், இவ்வாறு விலை மதிப்புள்ள பொருளை அடகு வைக்கமாட்டேன். தீர்மானமாய் நான்கு தினங்களில் பணமும் வந்துவிடும்; கிரீடத்தையும் திருப்பி விடுவேன். அடமானத்தைப்பற்றி சந்தேகமில்லையே?" என்று இடைமறுத்துக்கூறினார்.

"சந்தேக மில்லை." என்றேன்.

"நாராயணசாமி நாயுடு அவர்களே! இப்பொழுது நான் கூறப்போவதைக் கவனித்துக்கேட்கவேண்டும். உங்களைப்பற்றி ஊரார் புகழுவதினாலும், உங்களுடைய நற்பெயரினாலும், என்னுடைய நம்பிக்கையை நீங்கள் அடைந்துவிட்டீர்கள். உங்கள் மீது பரிபூரண நம்பிக்கொண்டிருக்கின்றேன். இம் மரகதக் கிரீடத்தைப்பற்றி உங்களைத்தவிர வேறு ஒரு மனிதருக்கும்—உங்களுடைய அந்தரங்கமான மனிதர்களுக்குகூட சமாச்சாரம் எட்டக்கூடாது. உங்களுடைய உயிரைப்போல் இதைப் பாதுகாக்கவேண்டியது. இது தவறிப்போகுமானால் எவ்விதமான கெட்ட பெயர் எனக்கு ஏற்படுமென்பதை நான் கூறியாகவேண்டியதில்லை. இதில் பதிப்பிக்கப்பட்டிருக்கும் மரகதம் ஏதாவது பின்னப்படுமானாலும் பொல்லாத ஆபத்துக்கும் அபவாதத்துக்கும் நான் ஆளாவேன். இம்மாதிரி மரகதங்கள் இக்காலத்தில் கிடைப்பதரிது. கிடைப்பதாயிருந்தாலும் இம்மாதிரி பதிப்பிக்க மிகவும் சிறமப்படவேண்டும். உங்கள்மீதுள்ள பரிபூரண நம்பிக்கையால் இதை உங்களிடம் வைத்துவிட்டுச் செல்கின்றேன். திங்கட்கிழமையன்று பணத்துடன் உங்களை வந்து பார்ப்பேன்." என்று கூறினர்.

ஜமீன்தாரவர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு செல்வதற்கு ஆவலாகவும் ஆத்திரமாகவும் இருந்தபடியால், குமாஸ்தாவைக் கூப்பிட்டு என்னுடைய பெட்டியிலிருந்து ரூபாய் 50,000 எடுத்துக் கொடுக்கும்படிக் கட்டளையிட்டேன். ஜமீன்தார் எனதறையை விட்டுச் சென்றதும், நான் தனிமையாக இருந்த பொழுது அம்மரகதத்தைப்பற்றிச் சிந்திக்கலானேன். "எவ்வளவு விலை மதிப்புடைய பொருள் எனது மேஜையின்மீது காணப்படுகின்றது! இதற்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமானால் ஓர் சமஸ்தானதிபதி எத்தன்மையான அபாவாதத்துக்கு ஆளாகவேண்டிவரும்? இது ஒரு தேசத்தின் அபூர்வப்பொருளில் ஒன்றல்லவா! இது என்பொருப்பில் இருப்பதற்கு நான் எதற்காக ஒப்புக்கொண்டேன்? இனிமேல் என்ன செய்வது. அணைகடந்து வெள்ளஞ் சென்றுவிட்டது. இனிமேல் அதைப்பற்றி யோசிப்பானேன்" என்று மனதுக்குள் எண்ணினேன்.

மாலையில் நான் வீட்டுக்குப் போகும் நேரம் வந்தது. இந்த அபூர்வ விலை மதிப்புடைய பொருளை எனக்குப்பின் ஆபீசில் வைத்துவிட்டுச் செல்வது நலமல்லவென்று நினைத்தேன். இதற்குமுன் எத்தனையோ பாங்குகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. எங்கள் பாங்கையும் ஏன் கொள்ளையடிக்காமலிருக்கவேண்டும்? அவ்வாறாயின் எனது கதி, எனது வாழ்நாள் எவ்வளவு பயங்கா

மாக முடியும். ஆகையால், இவைகளை உத்தேசித்து, அம்மாகதக் கிரீடம் எப்பொழுதும் என்னுடனேயே இருக்கவேண்டுமென்று உறுதி செய்துகொண்டேன். காலையில் ஆபீசுக்கு வரும்பொழுது அதைக்கொண்டுவந்தும், மாலையில் வீட்டுப்போகும்பொழுது அதை என்னுடன் எடுத்துச்சென்றும், இவ்வாறு நான்கு தினங்கள் அதை உயிரினும் பெரிதாகக் காப்பாற்றுவது எனது கடமையென்று எண்ணினேன். ஆகையால் ஓர் ரிக்ஷாவண்டியில் ஏறிக்கொண்டு அப்பொருளை என் மார்புடன் அணைத்துக்கொண்டு வீடு சென்றேன். அதை மாடியிலுள்ள எனது இரும்புப்பெட்டியில் (Iron Safe) வைத்துப் பூட்டின் பலத்தைச் சோதித்தறிந்த பிறகே எனது மூச்சு சரியாகச் செல்லத் தொடங்கிற்று.

இனிமேலுரைக்கவேண்டிய திடுக்கிடும் சம்பவத்துக்குமுன் எனது குடும்ப மனிதர்களை நீங்கள் அறியவேண்டியதிருக்கின்றது. என்னுடைய இருபணியாளர்கள் வீட்டின்முன் தாழ்வாரத்தில் தூங்குவது வழக்கம். மூன்று பெண்மணிகள் என் வீட்டில் வேலை செய்து வருகின்றனர். பல வருடங்களாக அவர்களுடன் நான் பழகிவருகின்றபடியால் அவர்களுடைய சந்தேகப்படமுடியாத அருங்குணத்தை அறிவேன். இவர்களைத்தவிர வேறு வேலையாட்கள் என் வீட்டுக்குள் நுழையமாட்டார்கள். எனது மனைவி சுமார் 8-வருடங்களுக்குமுன் காலகதி அடைந்துவிட்டாள். அதற்குப் பிறகு மணஞ்செய்துகொள்ளவில்லை. ஒரே யொரு புத்திரன்மாத்திரமிருக்கின்றான். நான் நினைத்ததற்கு மாறாக அவன் முற்றிலும் திரும்பிவிட்டான். என்னைத்தான் நொந்துகொள்ளவேண்டும். நான்தான் அவனைக்கெடுத்துவிட்டேனென்று ஜனங்கள் சொல்லுகின்றார்கள். எனது மனைவி இறந்ததும் அவன்மீதுள்ள எனது வாத்சல்யம் பதின்மடங்காக அதிகரித்தது. அவனுடைய வதனம் வாடும்படி நான் ஒருபொழுதும் நடந்துகொள்ளமாட்டேன். அவன் வேண்டுதலை நான் ஒருபொழுதும் மறுத்தது கிடையாது. எனக்குப்பின் இந்த வியாபாரத்தை அவன் நடத்திவரவேண்டுமென்பதே எனது கொள்கை. அவனை மெட்ரிகுலேஷன் (S. S. L. C.) வரைப்படிக்கவைத்தேன். ஆனால் ஆறு வருடங்களாக அவன் அபஜயமடைகின்றான். அத்துடன் முரட்டுத்தனமாயும், பொறுப்பு உணராத மனிதன் போலவும் அநேகந்தடவைகளில் அவன் நடந்துவருவதால் லட்சக்கணக்காக நடைபெறும் வியாபாரத்தில் அவனை நம்புவது எளிதல்லவென்றுணர்ந்தேன். பள்ளியிற் படிக்கையிலேயே தண்ணீர்போல் பணத்தை அள்ளிவிடும் சில 'நண்பர்'களுடன் நேசம் பாராட்டிவந்தான். நான் கொடுக்கும் பணத்தைமாத்திரம் வேசி வீட்டிலும், சீட்டாட்டத்திலும், குடி

யிலும் ஒழியவைப்பதன்றி, அவ்விடங்களிலெல்லாம் ஏராளமான கடன்வைத்துவிட்டு, அதை அடைப்பதற்கு என்னிடம் வந்து பல்லைக்காட்டிக் கெஞ்சுவான். ஆனால் அவனையும் முற்றிலும் குறைகூறி விடக்கூடாது. இவ்வயோக்கிய நட்பாளர்களினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ள இரண்டு மூன்று தடவை அவன் முயன்றான். ஆனால் அவனுடைய நண்பன் வரதராஜன் அவ்வாறு செய்வதற்கு இடங்கொடுப்பதில்லை. ஆகையால் எனது ரங்கசாமி எனது விரோதியாக இருந்து வருகின்றான். வரதராஜன் எனது மைந்தனைக் காட்டிலும் இரண்டு வருடங்களுக்குப் பெரியவனாக இருக்கலாம். எனது வீட்டுக்கு அவன் அடிக்கடி வந்திருப்பதால் அவனை நான் பார்த்ததுண்டு. அவனை நம்பினால் ஆழமான குழியில் ஆழ்த்துவானென்று அவனுடைய நேத்திரங்களே தெரிவிக்கின்றன. இவனைத் தவிர சாரதாவென்ற எனது சகோதரியின் மகள் என்னுடன் இருந்து வருகின்றாள். எனது சொந்த அருமைப் பெண்போல் அவளை நான் வளர்த்து வருகின்றேன். இப்பொழுது அவளுக்கு 18-வயது. அழகிற் சிறந்த அணங்கு. குணத்திற் சிறந்த கன்னிகை. தன்னை மணந்துகொள்ளும்படி எனது ரங்கசாமி சிற்சில சமயங்களில் அவளிடங் கேட்டதுண்டு. ஆனால் ஒவ்வொரு தடவையும் சாரதா அவனை வெறுப்புடன் நோக்கினாள்—நோக்குகின்றாள்.

கஜபதிசிங் அவர்களே! துப்பறியும் நிபுணரே! எனது குடும்ப வரலாற்றைக் கூறியாய்விட்டது. அன்றிரவு நாங்கள் போஜனஞ்செய்துகொண்டிருந்த சமயம் மரகதக்கிரீடத்தைப்பற்றி பேச ஆரம்பித்தேன். அதன் விஷயம் மர்மமாகவே இருக்கவேண்டுமென்று ஜமீன்தார் பலதடவை கெஞ்சிக்கொண்டிருந்த போதிலும், எனதுயிர்போலிருக்கும் மைந்தனிடத்தும், மருமகளிடத்தும் அதைப்பற்றி உரைப்பது அபாயத்தை விளைவிக்குமென்று நான் கருதினேனில்லை ஆகவே, ஜமீன்தாருடைய பெயரையும், எவ்வளவு தொகைக்காக அது அடமானமாகவைக்கப்பட்டிருக்கின்றதென்பதையும் மறைத்து, மரகதக்கிரீடத்தைப்பற்றி அவர்களிடங் கூறினேன். ஆவலினால் தூண்டப்பட்ட அவர்கள் அக்கிரீடத்தைத் தங்களிடம் காட்டவேண்டுமென்று என்னை வற்புறுத்தினார்கள். முதலில் நான் மறுத்தேன். பிறகு, அவ்வாறு வற்புறுத்திக்கேட்பது நியாயமல்லவென்று அவர்களே அதை விட்டுவிட்டார்கள். ஆனால், "இந்த விலை மதிப்புள்ள பொருளை எங்கு வைத்திருக்கின்றீர்கள்?" என்று ரங்கசாமி கேட்டான்.

"எனது சொந்த இருப்புப்பெட்டியில்" என்றேன்.

"கொள்ளை போகாமலிருக்கும்பொருட்டு கடவுளை வேண்டிக்கொள்ளுகின்றேன்", என்றான்.

"அது நன்றாகப் பூட்டப்பட்டிருக்கின்றது.", என்றேன்

"அப்படியா! கள்ளத்திறவுகோல்கள் கணக்கின்றி உபயோகிக்கலாம். சிறுபையனாக இருக்கும்பொழுது, அம்மாவின் பெட்டிச் சாவியால் உங்கள் பெட்டியைத் திறந்திருக்கின்றேன். இது பிரமாத காரியமல்ல". என்றான். எப்பொழுதும் மூட்டுத்தனமாக பேசும் வழக்கமாதலால், அவனுடைய மொழிகளை நான் பொருட்படுத்தவில்லை ஆனால் அன்றிரவு என்னைப்பின்பற்றி எனது படுக்கையறைக்குள் நுழையும்பொழுது அவனது வதனம் கலவரப்பட்டிருந்தது.

"அப்பா! இதோ பாருங்கள். இப்பொழுது எனக்கு இரண்டாயிரம் ரூபாய் வேண்டும்." என்று கீழே குனிந்தவண்ணம் என்னிடங் கேட்டான்.

"என்னிடம் பணமே கிடையாது. இருந்ததையெல்லாம் உன்னிடங் கொட்டிக்கொடுத்தாய்விட்டது" என்று கோபமாய் நான் பதிலுரைத்தேன்.

"என்மீது நீங்கள் அவ்வுகடந்த பிரீதிவைத்திருப்பதை நான் அறிவேன். ஆனாலும் இப்பொழுது எனக்கு இப்பணம் வேண்டும். இல்லாவிட்டால் எனது நண்பர்கள் முகத்தில் விழிக்கமுடியாது." என்றான்.

"அது நல்லதுதான்!" என்று பற்களைக்கடித்துக்கொண்டு கூறினேன்.

"நீங்கள் என்னதான் கூறினாலும் எனது நண்பர்களுடைய பழிக்கு நான் ஆளாகமாட்டேன். மான அவமானம் வருவதாயிருந்தால் எனதுயிரை இழக்கத்திண்ணமாயிருக்கின்றேன். நீங்கள் இப்பணத்தைக்கொடுப்பதற்கு மறுத்தால் வேறு முறைகளை நான் கையாளவேண்டி வரும்." என்று கலவரத்துடன் பதிலுரைத்தான். அவனுடைய மொழிகள் எனது ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டன. ஏனென்றால் இம்மாதத்தில் இது மூன்றாந்தடவையாகப் பணங்கேட்டது. "நீ கேட்கும் தொகையில் ஒரு பைசாக்கூட அளிக்கமாட்டேன்." என்று நான் கடிந்துகொண்டதும், பதில் மொழி பகராமல் அறையைவிட்டு வெளியே சென்றான். அவன்

காலடிச்சத்தம் நின்றதும் எனது இரும்புப்பெட்டியைத்திறந்து, மாகதக்கிரீடம் பத்திரமாக இருக்கின்றதாவெனப்பார்த்து, திரும்பவும் அதைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினேன். பிறகு வீட்டின் வெளிப்புறத்தின் வழியாயும் உட்புறத்தின் வழியாயும் நடந்து சென்று வீட்டுக்கதவுகளையெல்லாம் தாளிட்டேன். தினந்தோறும் இவ்வேலையைச் சாரதாசெய்து வருவாள். ஆனல் நேற்றிரவு மாத்திரம் இதை நானே செய்தேன். திரும்பவும் நான் படுக்கையறைக்கு வந்தேன். வரும்பொழுது தன்னுடைய அறையின் ஜன்னலின்மீது சாரதா வீற்றிருப்பதைப் பார்த்தேன். எனது நடையைப் பார்த்ததும் அவள் ஜன்னற் கதவை அடைத்துத் தாளிட்டாள்.

" மாமா! கோமளத்திற்கு இன்றிரவு வீட்டைவிட்டு வெளியே செல்வதற்கு உத்தரவு கொடுத்தீர்களா?" என்று சாரதா வினவினள்.

" இல்லை." என்றேன்.

" பின்புறக் கதவுவழியாய்ச் சிறிதுநேரத்துக்குமுன் அவள் இங்கு வந்தாள். ஜன்னலின் வழியாக அடிக்கடி அவள் வீதியைப் பார்த்துக்கொண்டிருந்தாள். யாரையோ அவள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றளென எண்ணினேன். இம்மாதிரி செய்வதற்கு அவளை விடக்கூடாது." என்றாள்.

" காலையில் அவளை நீ கண்டித்து விஷயத்சொல். இல்லாவிட்டால் நான் சொல்லுகின்றேன். வீட்டின் கதவுகளெல்லாம் நன்றாகத் தாளிடப்பட்டிருக்கின்றனவோ?" என்றேன்.

" ஆம்." என்றாள்.

" அவ்வாருயின் நான் படுக்கச்செல்கின்றேன்.", என்று கூறிவிட்டு படுக்கையறையை நாடினேன்.

கஜபதிசிங் அவர்களே! எனது மனதிலுள்ளவைகளைத் தெளிவாய் உரைக்கின்றேன். ஏதாவது உங்களுக்கு சந்தேகத்தை விளைவிக்குமானல் அதைப்பற்றி என்னிடம் கேட்கலாம். இப்பொழுது எனது சரிதையின் முக்கியமான பாகத்துக்கு வருகின்றேன்.

இரவில் நான் அயர்ந்து தூங்கும் வழக்கங்கிடையாது. மேலும் நேற்றிரவு களைப்பின்மிகுதியால் சற்று அயர்ந்து விட்டேன் ஆனால். திடீரென்று இரவில் 1-30 மணிக்கு நான் கண்விழித்தேன். படபடவென்ற சத்தம் எனது செவிகளை எட்டியது. உடனே நான் படுக்கையினின்றும் எழுந்திருந்து ஆடைகளைச் சரியாகச் செய்துகொள்ளுவதற்குமுன் அச்சத்தம் நின்றுவிட்டது. ஆனால் ஜன்னற்கதவு திறக்கப்படுவதினாலும் அடைக்கப்படுவதினாலுமேயே அச்சத்தம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று ஊகித்துக்கொண்டு மெதுவாகக் கதவின்பக்கம் சென்றேன். எனது தேகத்திலுள்ள ரோமங்கள் நின்றன. அடுத்த அறையில் ஆள் நடமாடும் சத்தம் எனது ஹிருதயத்தை ஊடுருவிச்சென்று பிளந்தது. கதவைத்திறந்து ஜன்னலின் வழியாக அடுத்த அறைக்குள் எட்டிப் பார்த்தேன். அங்கு ரங்கசாமி நின்றுகொண்டிருப்பது மங்கின ஓர் தீபவொளியின் மூலமாகத் தெரியவந்தது.

“ரங்கசாமி! கொடிய திருடா! பழிகாரா! மரகதக் கிரீடத்தைத் தொடுவதற்கு நீ துணிந்து விட்டாயா?” என்று கோபத்துடன் கூக்குரலிட்டேன். மடமடவென நடந்து சென்று வெளிச்சத்தைப் பிரகாசமாக்கினேன். நான்படுக்கச்செல்வதற்குமுன் எவ்வாறு ஆடை அணிந்துகொண்டிருந்தானோ அவ்வாறே அப்பொழுதும் அணிந்துகொண்டிருந்தான். அவனது கரத்தில் மரகதக் கிரீடம் பளபளவென மின்னிக்கொண்டிருந்து. அதைப் பார்த்தும் எனதுயிர்போய்விட்டதென்றே கூறவேண்டும். அக்கிரீடத்தைத் தட்டி வளைக்க முயற்சி செய்கின்றவன்போலக் காணப்பட்டான். எனது கூக்குரலைக் கேட்டதும் அதைக் கீழே நழுவவிட்டு, பிணம் போன்று இரத்த ஓட்டமில்லாத வதனத்துடன் நின்றான். உடனே ஓடிச்சென்று, கீழே கிடக்கும் கிரீடத்தை எடுத்துப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! என்ன துணிச்சல்! கிரீடத்தின் ஓர் மூலையிலுள்ள மூன்று மரகதங்களைக் காணோம்! எனது மைந்தன், எனது அளவிலா அன்பைக் கவர்ந்தவன் என்னுடைய வீட்டிலேயே கன்னமிடுவதா! கிரீடத்தின் ஓர் மூலையிலுள்ள மூன்று மரகதங்களைக் களவாடவேண்டி அம்மூலையைச் சின்னபின்னமாக்கியிருக்கின்றான். வரம்பு கடந்த கோபம் வந்துவிட்டது.

“அயோக்கியத் திருட்டுராஸ்கல்!” என்று நான்பற்களை நெறநெறவெனக் கடித்துக்கொண்டு, கண்களில் கோபத்தீ பறக்கும்படி கூறினேன். அவன் தலை நிமிர்ந்து பார்த்தான்.

“அக்கிரீடத்தை நீ கெடுத்துவிட்டாய். தலை முறைகாலமாய் அவமானமும், அபாண்டமான பழியும் நிலைத்து நிற்கும்படி நீ வழிதேடிவிட்டாய். கிரீடத்தினின்றும் கொள்ளையடித்த மரகதங்களெங்கே?” என்று மறுபடியும்நான் கேட்டேன். (தொடரும்)

## 2; பெரியாழ்வார் பிரபந்தம்.

(முன் 280-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

27. திங்கள் வதனத் திருவனைய தேவகிபாற்
தங்கிப் பிறந்தாயர் தன்பால் வளர்ந்தபிரான்
செங்கமலக் கண்காண்மின் சேயிழையீரென்றவர்த
மங்கமலக் கண்கண் டனைவர்களும் வாழ்த்தினர்.

28. நெருப்புருவத் தான்சாப நீக்கிவரு நீலப்
பொருப்புருவங் கொண்டவிறை பூமகடன் கேள்வன்
றிருப்புருவங் காண்மினென்ற செல்வன் புருவத்
திருப்புருவங் கண்டாங் கிமையவரும் வாழ்த்தினர்.

29. அகரத் தனிச்சோதி யாயர்கள் கோமா
னுகரத் திணை யுறக்கிற் றறிந்தான்
மகரக் குழையிரண்டுங் காண்மினென்ற வள்ளல்
பகர வரியகுழை பார்த்தமரர் வாழ்த்தினர்.

30 உற்ற புவன மனைத்து முகிப் பித்தகனுட்
சிற்றிடைச் தேவகிபார் சீரார் வயிற்றுதித்தா
னெற்றி யிருந்தவா நேரிழையீர் காண்மினென்று
னெற்றைப் பிறைநுதல்கண் டுத்தமர்கள் வாழ்த்தினர்.

31. ஆராயும் வேத மயர்வெய்த வண்டர்கையி
லோரா ரணைகயிற்றாற் கட்டுண்ட வெம்பெருமான்
சீரார் குழல் காண்மி னென்றான் றிருக்குழல்கண்
டூராரு முற்றாரு முண்மகிழ் வோடாடினர்.

வேறு

32. இவ்வணம் பாத மாதியாய்க் கேச மந்தமா யிலங்கு மெய்ஞ் ஞான
மெய்வணக் குழவி யவையவச் சிறப்பை மேதினியுள்ளவர் தமக்கு
மைவணத் திறைசேர் புதுவைமா நகரின் மறையவர் மகிழ்வொடு முரைப்பப்
பொய்வணத் துயரைக் கடிபவர் பலரும் புகுந்தனர் முகுந்தன தகத்தில்.

33. ஆணவந் திரண்டு ருவெடுத் துலாவு மைம்புல வேடர்களணி யாம்
பூணவம் பூண்டு பொய்ப்பரி மீதாய்ப் பூமியைப் பொடிசெய் வார் செயலைக்
காணவந் தவரைக் காணவந்தவர்க ளுடம்பெலாங் கண்ணிலா கையினா
லூணவ முறக்க மவம்பிறப் பவமென் றுளங்கசிந் துருகிநைந் தொசிந்தார்.

34. எண்ணிநின் றிறைஞ்சிப் பாலனை நோக்கி யிரங்கினர் வாக்கினா லிசைப்பார்
புண்ணியக் கொழுந்தோ நான்மறைக் கொழுந்தோ போதத்தின் பொலிசுடர்க் கொழுந்தோ
வெண்ணிய சாந்தி தருமெழிற் கொழுந்தோ விசைப்பதோர். கமையருட் கொழுந்தோ
விண்ணிய லமுதின் சுவைதிரண்டதுவோ வேதியர் தவந்திரண்டதுவோ.

35. தந்தைதாய் செய்த தவப்பயன்றனோ தத்துவத் துற்றமெய்ப் பொருளோ
விந்தமா நிலத்தோர் செய்தவப் பயனோ விலங்கு வானவர் செய்ததவமோ
கந்தநாண் மலரோன் வாசவ னக்கன் காண்பரும் பரஞ்சுட ரொளியைத்
தந்துநா முய்ய வந்ததோ ருருவோ வென்றென்று சாற்றி வாழ்த்தினரால்.

36. இப்படி படியிற் பாலனைக் கண்டார் யாவரு மிரங்கி நின்றேத்த
மைப்படி கண்ணார் மாதர்கள் பலரும் மகப்பெறு பற்புமைத் திருவு
மெய்ப்படிந் திலங்கு குழவி யோடளாவி மிகு மனு பவ விளையாட்டின்
கைப்படிந் திலங்கும் பருவமோர் பத்துங் கருமுகிற் குரைத் தவற் குரைத்தார்.

37. சீருடைக் குழவி யிணையடியாதி திருமுடி வரையினி லணியா
மேருடைச் சதங்கை சுட்டிமற் றிதனுக் கிடையிடை பூண்பன கமலத்
தாருட னணிந்து வளருநாளொருநாட் டையலார் தற்பரா வமுதைக்
கூறிய தவத்தோர் செவிப்புல னிறைப்பீர் கொள்ளுமி னமுதெனக் கொடுத்தார்.

38. இன்னமு தருந்திச் சவுள நான் மறைக ளிசைத்தவர் செய்துமுப்புரிநூ
றன்னைபு மந்நூ லறைந்தவப் படியே தரித்துமா னுரிமுஞ்சி தரித்து
மன்னிய பிரமசாரியாய்ப் புவியில் வாழுநாண் முழுவதும் வாழ்வா
ரன்னம தூர்தி தாதையா ரடிமை யாகுநா மென்பதைத் யறிந்தார்.

39. அத்திற மறிந்து வடபெருங் கோயி லுடையவ ரடியிணை வணங்கி
யெத்திறஞ் செய்தா லிவருள மகிழு மெனவிறை திருவவதார
மெய்த்திறத் தாரின் மூன்றினிற் கஞ்சன் விறல்கெடப் பிறந்தவர் தமக்குச்
சித்திர மாலா காரர்தம் பூவிற் றிருவுள மகிழ்தல்சிந் தித்தார்.

40. அதுவலா வடிமைத் திறத்தினுக் குரிமை யிலதென வகத்தினுட் டெளிந்து
மதுமலர்த் துளதி மல்லிகை யலரி சண்பகம் வளர்மருப் பிச்சி
புதுமதுப் பொங்கி வளர்கழு நீர்கள் செவ்வந்தி புகறரு கமல
மிதுவது வென்னா திறைவனார் சாத்தற் கிசைவன நறுமலர் யாவும்.

41. ஆக்கிடு நந்த வனங்கள் பற்பலவு மணிதிகழ் பொய்கைகள் பலவு
மாக்கிமற் றதனு ளலர்மலர் போக்கியரும்புவிட் டப்பொழு தலரும்
பூக்களைத் தெரிந்து புழுக்கடி போக்கிப் பொய்யிலா மெய்யனார் புனைதீர்
மூக்கிலம் மணஞ்சென் றணைந்திடா வண்ணமூடி வாய்புதைத்து முக்குணத்தில்.

42. துன்பநல்கிரண்டுந் துடைத்துமெய்ஞ்ஞானச் சுடர்தரு
சாத்திகத்துணிவா
லன்பனார் திருப்பூக் கூடையின்முன்ன மறைந்தசீர் நறுமல
ரமைத்து
முன்பினார் கூடை யிரண்டொருகோலின் முறைபிணைற்
கோத்தவைகாவி
யென்பெலா முருக வானந்தவாரி யிருகணு லிடையறு
தொழுக.

43. பங்கய வடிபோத் திடுந்தொறு மதனுட் பட்டபுற் பசுமை
கொண்டோங்கப்
பொங்கிய சரமு மசரமு முருகப் பூமகண் மனமொடு வாக்கு
மங்கமுங் குழைய நடந்தவர் கிடந்த வச்சுதன் வடபெருங்
கோயி
றங்கிய திருமா றிருவுள முவப்பத் தடமலர்த் தார்பல
சமைத்தே.

44. பகலொரு சாமங் கழிந்தபின் ஞெளிக்கொள் பரஞ்சுடர்
வடபெருங்கோயிற்
புகலருங் கருணை யிறைவனை வணங்கிப் பூமலர்க்காவினிற்
புகுந்தே
யகலம துடைத்தாய் நொய்யதாய்க் கைசேர்ந் தழகுறு
கொட்டவ ணெடுத்து
சகலரு மிரங்க விருநிலங் குடைந்தூ தட்டுற நித்தியத் தலத்
தில்.

வேறு.

45. மருவேரு மல்லிகையுஞ் சண்பகமும் வளர்துளவு
மிருவேலி தருதளிரு மிலாமிச்சி னெழின்முடுங்
கருவேரை யறுத்தபிரான் கயிங்கரிய முதிர்ச்சிதருந்
திருவேர்வி லானந்தக் கண்ணீரிற் சேறு செய்தே.

46. வைத்து நன்னீ றுறப்பாச்சி மாயனிடை மடைமாறுப்
பத்தியினார் மடைமாற்றிப் பகற்பொழுதைக் கழித்ததற்பி
னெய்த்தநறு மலரந்தித் திருமாலை நேயத்தாற்
பைத்தபாம் பணைக்கிடந்த பரமனுக்குச் சமைத்தளித்தே.

47. மங்குறோய் மணிமாட வடபெருங்கோ யிலர்தமக்குப்
பொங்குமதுப் பொழிகாவிற் புகுந்துபணி செய்வதற்குக்
கங்குலெனத் தடைசெய்த கயிங்கரிய விரோதியை நொந்
தங்கமிடிந் திருத்தாழ்வா ரருணவுதை யத்தெழுந்தே.